# அரியலூரில் வழக்குரைஞர்கள் நீதிமன்றப் பணிகள் புறக்கணிப்பு



அரியலூரில் நீதிமன்றப் பணிகளை புறக்கணித்து, திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வழக்குரைஞர் சங்கத்தினர்.

**அரியலூர், ஆக.17:** அப்பாவி தமிழர்கள் 3 பேரை சுட்டுக் கொன்ற கர்நாடக வனத் துறையினரை கண்டித்து, அரியலூரில் வழக்குரைஞர்கள் சங்கத்தினர் திங்கள்கிழமை நீதிமன்றப் பணிகளை புறக்கணித்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில், அப்பாவி தமிழர்களை சுட்டுக் கொன்ற கர்நாடக வனத் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்நாடக மாநில அரசு, காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி காவிரியில் நீரை திறந்து விட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அரியலூர் வழக்குரைஞர்கள் சங்கத்தினர் நீதிமன்றப் பணிகளை புறக்கணித்து, ஒருங்கிணைந்த நீதிமன் வளாகம் முன் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்துக்கு, அச்சங்கத்தின் தலைவர் ஆர்.மனோகரன் தலைமை வகித்தார். செயலர் எம்.ராஜா, பொருளாளர் கமலக்கண்ணன், வழக்குரைஞர் செல்ல.சுகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு முழக்கமிட்டனர்.

**பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த கோரிக்கை**

# பாரதிய மஸ்தூர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகம் எதிரே திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாரதிய மஸ்தூர் சங்கத்தினர்.

**பெரம்பலூர்/அரியலூர்/ கரூர், ஆக. 17:** பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகம் எதிரே பாரதிய மஸ்தூர் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு, அச் சங்கத்தின் மாவட்டத் தலைவர் சி. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் ஏ.கே. செந்தில்குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட பார்வையாள பி. தணிகை அரசு கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

இதில், இபிஸ் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை ரூ. 1,000-த்திலிருந்து ரூ. 7,500 ஆக உயர்த்தி, அகவிலைப்படியுடன் வழங்க வேண்டும். ஓய்வூதியதாரர்களை ஆயுஷ்மான் பாரத் மருத்துவத் திட்டத்தில் இணைக்க வேண்டும். பாரதிய மஸ்தூர் சங்கம் முன்வைத்த பட்டியலை ஏற்று தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை திருத்தம் செய்ய வேண்டும். பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துவகை தொழிலாளர்களுக்கும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். விலை உயர்வுக்கேற்ப குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முழக்கமிட்டனர்.

இதில், பாரதிய மஸ்தூர் சங்கத்தைச் சேர்ந்த திரளானோர் பங்கேற்றனர்.

**அரியலூரில்:** அண்ணா சிலை அருகே பாரதிய மஸ்தூர் சங்கத்தின் (பிஎம்எஸ்) மாவட்டத் தலைவர் கண்ணதாசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருச்சி பெல் பிஎம்எஸ் செயலர் ஜெயராமன் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். மாவட்ட பொதுச் செயலர் ராஜா, மாவட்ட பொருளாளர் மணிகண்டன், செட்டிநாடு சிமென்ட் ஆலை பிஎம்எஸ் செயலர் அறிவழகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு முழக்கமிட்டனர்.

**கரூர்:** தலைமை அஞ்சல்நிலையம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் கே.சிவகுமார் தலைமை வகித்தார். செயலர் சி.கருப்பையா வரவேற்றார். துணைச் செயலர் வி.விஜயலட்சுமி முன்னிலை வகித்தார்.

மாவட்ட அமைப்புச் செயலர் எஸ்.மாடசாமி, அரசுப் போக்குவரத்துக்கழக பொதுச்செயலர் எஸ். சதீஸ்குமார் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினர். இதில், பாரதிய மஸ்தூர் சங்கத்தினர் திரளாக பங்கேற்றனர்.

**பக்தர்கள் கைப்பேசி பயன்படுத்த தடை**

# தாந்தோன்றிமலை பெருமாள் கோயிலில் செப். 1 முதல் அமல்

**கரூர், ஆக.17:** கரூர் தாந்தோன்றிமலை கல்யாண வெங்கடரமண சுவாமி கோயிலில் பக்தர்கள் கைப்பேசி பயன்படுத்துவதற்கான தடை உத்தரவு செப்.1 முதல் அமல்படுத்தவுள்ளதாக கோயிலின் செயல் அலுவலர் வெ.ராஜேஸ்வரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை விடுத்துள்ள செய்திக்குறிப்பு: அண்மையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு, கோயிலுக்குள் பக்தர்கள் கைப்பேசியை பயன்படுத்த தடை விதித்திருந்தது. இந்த உத்தரவின்படி கரூர் தாந்தோன்றிமலை கல்யாண வெங்கடரமண சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்கள் கைப்பேசியை பயன்படுத்த செப்.1-ஆம் தேதி முதல் தடைவிதிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக கோயில் நிர்வாகம் சார்பில் கோயில் முன் அறிவிப்பு பதாகைகளும் வைக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார் அவர்.

# ஆக. 21-இல் கீழப்பழுவூரில் வேலைவாய்ப்பு முகாம்

**அரியலூர், ஆக.17:** அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூரிலுள்ள அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம் சார்பில், தனியார் வேலைவாய்ப்பு முகாம் ஆக.21-ஆம் தேதி காலை 10 முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறுகிறது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் முன்னணி தனியார் நிறுவனங்கள் மற்றும் திறன் பயிற்சியளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு, 300-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தேவையான ஆள்களை தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்ய உள்ளனர்.

18- 45 வயது வரையுள்ள, 8-ஆம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு, பொறியியல் பட்டதாரிகள், வேளாண் பொறியியல், தொழிற் பயிற்சி, தொழில் பட்டயப் படிப்பு, செவிலியர், உணவக மேலாண்மை படித்த வேலைநாடுநர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு, 94990-55914 என்ற கைப்பேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என ஆட்சியர் ந.மிருணாளனி தெரிவித்துள்ளார்.

**தேநீரகத்தில் சிலிண்டர் வெடித்த சம்பவம்**

# காயமடைந்த மேலும் ஒருவர் உயிரிழப்பு இறந்தோர் எண்ணிக்கை 4 ஆக உயர்வு

**பெரம்பலூர், ஆக. 17:** பெரம்பலூரில் உள்ள தேநீரகத்தில் அண்மையில் எரிவாயு உருளை வெடித்துச் சிதறிய சம்பவத்தில் காயமடைந்த மேலும் ஒருவர் திங்கள்கிழமை உயிரிழந்தார். இதையடுத்து, இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளது.

பெரம்பலூர்- வடக்குமாதவிச் சாலையிலுள்ள குறிஞ்சி நகரைச் சேர்ந்த சப்பாணி மகன் அருணாச்சலம் (40). பெரம்பலூர் நகர காவல் நிலையம் எதிரே தேநீரகம் வைத்துள்ளார். இந்தக் கடையில் கடந்த 11-ஆம் தேதி மாலை எரிவாயு உருளை வெடித்துச் சிதறியது.

இந்த விபத்தில் கடையில் பணிபுரிந்த தொழிலாளர்கள் மற்றும் தேநீரகத்தில் நின்றிருந்த வாடிக்கையாளர்கள், சாலையோரம் நடந்துசென்றவர்கள், பள்ளி மாணவி உள்பட மொத்தம் 16 பேர் பலத்த காயமடைந்தனர்.

இவர்களில் 5 பேர் பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலும், எஞ்சிய 11 பேர் தீவிர சிகிச்சைக்காக திருச்சி அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில், பொம்மனப்பாடி கிராமத்தைச் சேர்ந்த மணிவண்ணன் மகன் மணிகண்டன் (42) கடந்த 13-ஆம் தேதியும், தேநீரகத்தில் மாஸ்டராக பணிபுரிந்த சிறுகுடல் கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் தினேஷ் (32), திருச்சி ரங்கா நகரைச் சேர்ந்த முத்துக்கருப்பன் மகன் சகாதேவன் (54) ஆகியோர் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தனர்.

இந்நிலையில், திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தேநீரக ஊழியரான கொட்டரை கிராமத்தைச் சேர்ந்த முத்துசாமி மகன் ஆறுமுகம் (50) திங்கள்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து பெரம்பலூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

# நாகபுரி திருவிழாவில் பங்கேற்கும் பௌத்தர்களுக்கு ரூ. 5 ஆயிரம் மானியம்

**கரூர், அரியலூர் ஆட்சியர் தகவல்**

**கரூர்/அரியலூர், ஆக.17:** நாகபுரி தீக்ஷா தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவில் பங்கேற்கும் பௌத்தர்களுக்கு ரூ.5,000 மானியம் வழங்கப்படும் என கரூர் மாவட்ட ஆட்சியர் சி. முத்துக்குமரன், அரியலூர் மாவட்ட ஆட்சியர் ந. மிருணாளினி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழகத்தைச் சேர்ந்த பௌத்தர்கள், நாகபுரி தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவில் கலந்து கொண்டு திரும்புபவர்களுக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.5 ஆயிரம் வரை மானியம் வழங்கும் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2026-ஆம் ஆண்டு பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் பௌத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை மாவட்ட ஆட்சியரகத்தில் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றி பெறலாம். மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை நவ. 15-ஆம்தேதிக்குள் உரிய ஆவணங்களுடன், ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை-600 005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

# தொடர்ந்து வேலை வழங்கக் கோரி டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் மனு



கரூர் மாவட்ட ஆட்சியரை திங்கள்கிழமை சந்தித்து கோரிக்கை மனு அளிக்க வந்த ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை ஊழியர்கள் சங்கத்தினர்.

**கரூர், ஆக.17:** தொடர்ந்து வேலை வழங்கக் கோரி டெங்கு கொசு ஒழிப்புப் பணியாளர்கள் திங்கள்கிழமை கரூர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திங்கள்கிழமை ஆட்சியர் சி.முத்துக்குமரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், ஊரக வளர்ச்சித்துறை உள்ளாட்சி ஊழியர்கள்(சிஐடியு) சங்கத்தின் மாவட்டச் செயலர் ரத்தினசபாபதி, தலைவர் சப்னா, சிஐடியு தொழிற்சங்க மாவட்டச் செயலர் எம்.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, குளித்தலை, கிருஷ்ணராயபுரம் உள்ளிட்ட 8 ஊராட்சி ஒன்றியங்களிலும் கிராமப்புற ஊராட்சி பகுதிகளில் 160 டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணியாற்றி வருகிறோம். எங்களுக்கு கடந்த ஒரு மாதமாக ஊராட்சியில் பணி வழங்கப்படவில்லை. மேலும் கடந்த ஜூலை மாத ஊதியமும் வழங்கப்படவில்லை. இதனால் எங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே ஜூலை மாதத்துக்கான ஊதியம் வழங்க வேண்டும். நாள்தோறும் கொசு ஒழிப்புபணிகளை தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

**ஆசிரியர் தகுதித் தேர்ச்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டும்:** நியமனத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கூட்டமைப்பினர் ஆட்சியரிடம் வழங்கிய மனுவில், நாங்கள் கடந்த 2013,17, 19, 22-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளோம். மேலும் 2024-இல் நடைபெற்ற நியமனத் தேர்விலும் தேர்ச்சிபெற்றுள்ளோம். இந்த தேர்வில் மாற்றுத்திறனாளிகள் மட்டும் 185 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். வேலைக்காக கடந்த 13 ஆண்டுகளாக காத்திருக்கும் நிலையில் தற்போது தொடக்கக் கல்வித்துறையில் தற்காலிக ஆசிரியர்களைக் கொண்டு பணி நியமனம் செய்யப்படுகிறது. இதனை ரத்து செய்து, ஏற்கெனவே தேர்வில் தேர்ச்சிபெற்றவர்களை நியமிக்க நடவடிக்கைஎடுக்கவேண்டும் என தெரிவித்துள்ளனர். முன்னதாக, கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து முதியோர் உதவித்தொகை, பட்டா மாற்றம் உள்ளிட்டவைத் தொடர்பாக மொத்தம் 613 மனுக்கள் பெறப்பட்டன.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகள் 4 பேருக்கு ரூ.24,754 மதிப்பில் உதவி உபகரணங்களை ஆட்சியர் வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கு.விமல்ராஜ், கரூர் வருவாய் கோட்டாட்சியர் சு.சத்தியபாலகங்காதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மானிய விலையில் மக்காசோள விதை: விவசாயிகளுக்கு அழைப்பு

**பாடாலூர், ஆக. 17:** பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் கொளக்காநத்தம் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் திட்டத்தின்கீழ் மானியத்தில் மக்காசோளம் விதைகள் (Advanta 752) வழங்கப்படுகிறது.

ஒரு கிலோ விதை ரூ.409.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அரசு சார்பில் மானியமாக ரூ.100 வழங்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் ரூ.309.50 மட்டும் செலுத்தி விதையை பெற்று கொள்ளலாம்.

இதற்கு விவசாயிகள் சிட்டா, ஆதார் அட்டை, ஆதாருடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண் ஆகியவற்றுடன் ஆலத்தூர் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் கொளக்காநத்தம் துணை வேளாண்மை விரிவாக்க மையத்துக்கு சென்று பெற்று கொள்ளலாம்.

விவசாயிகள் தங்கள் பங்குத்தொகையை பணமாகவோ, ஜிபே மற்றும் போன்பே ஆகியவற்றின் மூலம் செலுத்தியோ, தரமான வீரிய ஒட்டுரக மக்காச்சோள விதைகளை பெற்று கொள்ளலாம்.


சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில்
மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : கிராஸ்கட் ரோடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.கோஸ்மரா பேர்ல் ஒஷன்,** தி ஃபிஷ் ஹவுஸ், எண் - 320, திருச்சி சாலை, விவேகானந்தா நகர், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - 641005. **பங்குதாரர்கள் மற்றும் உத்தரவாதம் அளித்தவர்கள் : (1) திரு.S.ஹரிஷ் பாபு,** சான்பிரிக்ஸ் வில்லா, எண்.19-20, GN மில்ஸ், ஃபோர்டு ஷோரூம் அருகில், கோயம்புத்தூர் - 641029. **(2) திரு.C.ராஜீவ், த/பெ.செல்லமுத்து,** எண். 10, ST-2, கவுண்டன்பாளையம், கிழக்கு 6வது தெரு, புளியூர் CF போஸ்ட், கரூர் தாலுக்கா மற்றும் மாவட்டம். **கடன் நிலுவைத் தொகை : 14.08.2026 வரையில் ரூ.2,79,51,720.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 21.04.2026. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 09.07.2026. சொத்து விபரம் :** குடியிருப்பு சொத்து, கரூர் பதிவு மாவட்டம், ஜாயிண்ட்-1, கரூர் சார்பதிவு அலுவலகம், கரூர் தாலுக்கா, புலியூர் கிராமம், இச்சொத்து SF No 1617/1A-ல், 2.96 ½ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் 2.01 ஏக்கர் நிலம் பொது அதிகாரப் பத்திரம் மூலம் விற்கப்பட்டது போக, மீதமுள்ள 0.95 ½ ஏக்கர் நிலமும், அதில் தற்போது அமைந்துள்ள RCC குடியிருப்பு கட்டிடமும் புதிய எஸ்.எஃப் எண் SF No: 1617/ 1A1A-ல், மாமூல் வழித்தட உரிமையுடன் பின்வரும் நான்கு எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: **சொத்தின் எல்லைகள்:** வடக்கில் S.F.No: 1618, தெற்கில் அம்மையப்ப கவுண்டருக்குச் சொந்தமான சொத்து, கிழக்கில் பொது அதிகாரப் பத்திரம் வைத்துள்ள முகவரால் விற்கப்பட்ட நிலம், மேற்கல் புலியூர்-சமத்துவபுரம் சாலை. **திரு.C.ராஜீவ் அவர்களுக்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.3,90,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.39,00,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 19.09.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 14.09.2026 முதல் 17.09.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 17.09.2026 மாலை 6.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கிராஸ்கட் ரோடு கிளை, முதன்மை மேலாளர் மொபைல் எண்.8489903061, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **17.09.2026,** மாலை **6.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கிராஸ்கட் ரோடு கிளை, முதன்மை மேலாளர் Mob No : 8489903061, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 14.08.2026**
**இடம் : கோயம்புத்தூர்**

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**



**சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**
பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: 2வது தளம், பி.எல்.ஏ. டவர், எண் 30, காந்தி நகர், திண்டுக்கல் பிரதான சாலை, பொன் நகர், திருச்சி - 620001
கிளை அலுவலகம்: 1வது தளம், எஸ்பிகே கார்ப்பரேட் சென்டர், 1C, எண்.45, சண்முக ராஜா சாலை, காரைக்குடி 630 002
தொடர்பு எண்: திரு. தியாகராஜன்- மொபைல் எண். 9940516215, திரு. தியாகு - மொபைல் எண்.9894265133

**அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(1)-இன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரருக்கு / கூட்டுக் கடன்தாரருக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்படும் அசையாச் சொத்துக்கள் இனி இங்கு **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** எனக் குறிப்பிடப்பட உள்ள **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கடனீட்டுச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் E-ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும். மேலும் இதன் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது யாதெனில் இதற்காக https://bankauctions.in இணையத்தளத்தில் நாங்கள் பொது E-ஏலம் நடத்த உள்ளோம்.

**1. கடன் கணக்கு எண்:** HE01ICH00000034638; **கடன்தாரர், கூட்டு கடன்தாரர், அடமானதாரர்களின் பெயர்:** 1. சண்முகம் அஜய் குமார், 2. ஸ்ரீஹரி ஹரன், 3. ஸ்ரீ அம்மன் ட்ரேடர்ஸ், எண்.25/27, தெற்கு வெள்ளாளர் தெரு காலனி சாலை, பாண்டமங்கலம், உறையூர், திருச்சி, தமிழ்நாடு - 620003. 4. ராயல் ட்ரிங்க்ஸ் (அதன் உரிமையாளர் சண்முகம் அஜய் குமார் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது), எண்.4, பள்ளர் தெரு அருகில், பாண்டமங்கலம், உறையூர், திருச்சி, தமிழ்நாடு - 620003; **பிரிவு 13(2)-ன் கீழான கோரிக்கை அறிவிப்பின்படியான தேதி மற்றும் தொகை:** 06-11-2025 மற்றும் 06-11-2025 தேதியின்படி ரூ.3,36,48,506/- ; **சொத்தின்/சொத்துக்களின் விவரங்கள்:** இனம் எண்.1: திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், உறையூர் சார்-பதிவாளர் எல்லை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், பாண்டமங்கலம் கிராமம், திருச்சிராப்பள்ளி நகரம், பழைய வார்டு 3, புதிய வார்டு L (C), பழைய பிளாக் 40, புதிய பிளாக் 11, பழைய நகர சர்வே எண் (T.S.No.) 2666 மற்றும் 2667-க்கு புதிய நகர சர்வே எண் 5-ன் ஒரு பகுதி மற்றும் 6 மற்றும் 7 ஆகியவற்றில் அமைந்துள்ள 0.22 செண்ட் (9,583 சதுர அடிக்குச் சமமான) பரப்பளவு கொண்ட, அனைத்து பயன்பாடு மற்றும் பாதை உரிமைகளுடன் கூடிய நிலத்தின் நான்கு எல்லைகள்:- வடக்கு: ரங்கநாதனுக்குச் சொந்தமான நிலம், தெற்கு: குடமுருட்டி ஆற்றுக்குச் செல்லும் சாலை, கிழக்கு: ஜுபைதா பீவிக்குச் சொந்தமான நிலம், மேற்கு: லியாகத் அலிக்குச் சொந்தமான நிலம். இனம் எண்.2: திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், உறையூர் சார்-பதிவாளர் எல்லை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், பாண்டமங்கலம் கிராமம், திருச்சிராப்பள்ளி நகரம், பழைய வார்டு 3, புதிய வார்டு L (C), பழைய பிளாக் 40, புதிய பிளாக் 11, பழைய நகர சர்வே எண் 2666 மற்றும் 2667-க்கு புதிய நகர சர்வே எண் 5-ன் ஒரு பகுதி மற்றும் 6 மற்றும் 7 ஆகியவற்றில் அமைந்துள்ள 0.22 செண்ட் (9,583 சதுர அடிக்குச் சமமான) பரப்பளவு கொண்ட நிலம், மற்றும் அதில் பழைய வரிவிதிப்பு எண்.086/60002021, புதிய வரிவிதிப்பு எண்.086/060/02347, மின் இணைப்பு எண் (E.B.Sc.No.) 06-203-067-773, மின் இணைப்பு, மீட்டர், மீட்டர் வைப்புத்தொகை, ஆழ்துளை கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றுடன் கூடிய தரைத்தளம், முதல் தள கட்டிடம் மற்றும் அஸ்பெஸ்டாஸ் சீட் கட்டிடத்துடன், அனைத்து பயன்பாடு மற்றும் பாதை உரிமைகளுடனும் அமைந்துள்ள சொத்தின் நான்கு எல்லைகள்:- வடக்கு: ரங்கநாதனுக்குச் சொந்தமான நிலம், தெற்கு: குடமுருட்டி ஆற்றுக்குச் செல்லும் சாலை, கிழக்கு: ஜுபைதா பீவிக்குச் சொந்தமான நிலம், மேற்கு: லியாகத் அலிக்குச் சொந்தமான நிலம். இச்சொத்து புதிய வார்டு L (C), புதிய பிளாக் 11, காலனி சாலை, பாண்டமங்கலம் கிராமம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், உறையூர் சார்-பதிவாளர் எல்லையில் அமைந்துள்ளது. இரண்டு இனச் சொத்துக்களின் மொத்தப் பரப்பளவு 0.44 செண்ட் அதாவது 19,166 சதுர அடி ஆகும்.

**நிர்ணய விலை: ரூ.4,00,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.40,00,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.1,00,000/-**

**2. கடன் கணக்கு எண்:** ML01ICH00000115409; **கடன்தாரர், கூட்டு கடன்தாரர், அடமானதாரர்களின் பெயர்:** 1. செந்தமிழ் குமரன் பி, 2. ரேவதி டி, 3. பொன்னுசாமி பவானி, ஆகிய அனைவரும் வசிக்கும் முகவரி: எண்.57, பிரதாபசிம்மபுரம், சீனிவாசபுரம், வெங்கடேஸ்வரா பள்ளி எதிரில், எம்.பி பழனிமாணிக்கம் வீடு, தஞ்சாவூர், தமிழ்நாடு - 613009, 4. அயர்ன் பாரடைஸ் (அதன் உரிமையாளர் செந்தமிழ் குமரன் அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது) எண்.72, பாஸ்கரன் பிளாட், சீனிவாசபுரம், டெம்பிள் கிரி ரோடு, தஞ்சாவூர், தமிழ்நாடு - 613009; **பிரிவு 13(2)-ன் கீழான கோரிக்கை அறிவிப்பின்படியான தேதி மற்றும் தொகை :** 09-03-2026 மற்றும் 09-03-2026 தேதியன்று உள்ளபடி நிலுவைத் தொகை ரூ.41,62,053/-; **சொத்தின்/சொத்துக்களின் விவரங்கள்: அட்டவணை** A: மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கோடம்பாக்கம் சார்பதிவாளர் மாவட்ட எல்லைக்குட்பட்ட கோடம்பாக்கம், புலியூர் கிராமம், வன்னியர் தெரு, கதவு எண் 18-ல் அமைந்துள்ள, பிளாக் எண் 6, நகர அளவை (T.S.) எண் 74/7-ல் அடங்கிய 3862 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலத்தின் அனைத்து பகுதிகள் மற்றும் பாகங்கள். இதன் அளவுகள்: கிழக்கு புறத்தில் வடக்கு தெற்காக 106 அடி 0 அங்குலம், மேற்கு புறத்தில் வடக்கு தெற்காக 101 அடி 0 அங்குலம், வடபுறத்தில் கிழக்கு மேற்காக 37 அடி 6 அங்குலம், தென்புறத்தில் கிழக்கு மேற்காக 37 அடி 6 அங்குலம். இதன் எல்லைகள்: வடக்கு: வன்னியர் தெரு, தெற்கு: திரு. பழனியின் நிலம், கிழக்கு: திரு. வேலப்ப நாயக்கரின் நிலம், மேற்கு: 6 அடி 0 அங்குல அகலமுள்ள பொதுப் பாதை. **அட்டவணை** B: மேற்கண்ட அட்டவணை A நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள, பொதுப் பயன்பாட்டு இடங்கள் உட்பட 840 சதுர அடி சூப்பர் பில்ட்-அப் பரப்பளவு கொண்ட F1 என்ற அடுக்குமாடிக் குடியிருப்பிற்கு (பிளாட்) உரிய, மேற்கண்ட அட்டவணை A சொத்தில் உள்ள 562 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு உட்பட.

**நிர்ணய விலை: ரூ.43,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.4,30,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.50,000/-**

**3. கடன் கணக்கு எண்:** HE01IKU00000037772; **கடன்தாரர், கூட்டு கடன்தாரர், அடமானதாரர்களின் பெயர்:** 1. பால்சாமி செல்வம், 2. செல்வம் சுலோச்சனா, 3. ஏபிஎஸ் மில்க் பாயிண்ட் (இதனை இதன் உரிமையாளர் செல்வம் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்), முகவரி: எண்.659A, முடுக்குவயல், கட்டுமாவடி, மணமேல்குடி தாலுகா, அளகண்வயல், புதுக்கோட்டை, தமிழ்நாடு - 614630.; **பிரிவு 13(2)-ன் கீழான கோரிக்கை அறிவிப்பின்படியான தேதி மற்றும் தொகை:** 19-01-2026 மற்றும் 19-01-2026 தேதியின்படி ரூ.37,57,829/- ; **சொத்தின்/ சொத்துக்களின் விவரங்கள்:** புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், மணமேல்குடி சார் பதிவு மாவட்டம், மணமேல்குடி தாலுகா, ஏனாதி வருவாய் கிராமம் ஆகியவற்றில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்துப் பகுதிகளும்; 1) சர்வே எண். 98/30-ல் 0.22.0 ஏர்ஸ் பரப்பளவு, 2) சர்வே எண்.98/31-ல் 0.22.0 ஏர்ஸ் பரப்பளவு, ஆக மொத்தம் 0.44.0 ஏர்ஸ். சர்வே எண் 98/30 பகுதி மற்றும் 98/31 உட்பிரிவு பட்டா எண்: 558, புதிய சர்வே எண் 98/30A 0.18.00 ஏர்ஸ் மற்றும் 98/31B 0.02.00 ஏர்ஸ் பகுதி என மொத்தம் 0.44.0 ஏர்ஸ் பரப்பளவில் தெற்கு மையப் பகுதியில் அமைந்துள்ள 0.20.0 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட, ஆர்.சி.சி. தளக் கட்டிடத்துடன் கூடிய வீட்டு மனை. இதன் நான்கு எல்லைகள்: வடக்கே: முத்துகுமாருக்குச் சொந்தமான சர்வே எண்கள் 98/30 பகுதி மற்றும் 98/31 பகுதியில் உள்ள புஞ்சை நிலம், தெற்கே: பால்சாமிக்குச் சொந்தமான புஞ்சை நிலம், கிழக்கே: பால்சாமிக்குச் சொந்தமான சர்வே எண் 98/35-ல் உள்ள புஞ்சை நிலம், மேற்கே: வண்டிப் பாதை.

**நிர்ணய விலை: ரூ.70,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.7,00,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.1,00,000/-**

**E-ஏல நாளும் நேரமும்: 08-09-2026 அன்று முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 3 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்)**
**டேவணித்தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள்: 07-09-2026 (மாலை 05:30 மணி வரை), ஆய்வு நாள்: 02-09-2026 மற்றும் 03-09-2026 (காலை 10:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை)**

1. ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் / ஏலதாரர்கள் அனைவரும் **https://bankauctions.in & www.cholamandalam.com/news/auction-notices** இணையத்தளங்களுக்கு வருகை புரியுமாறு அழைக்கப்படுகிறார்கள். E-ஏலம் குறித்த விவரங்கள், உதவி, நடைமுறை, இணைய வழிப் பயிற்சி ஆகியவற்றைப் பெற விருப்பமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **திரு. முகமது ரஹீஸ் - தொ.பே. எண்:** 8124000030 / 6374845616, **M/s. 4 குளோசியூர்; ரேகா, தொ.பே. எண் -** 8142000062, **மின்னஞ்சல்: CholaAuctionLAP@chola.murugappa.com.** 2. E-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான கூடுதல் விவரங்களுக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் வருக: **https://bankauctions.in & www.cholamandalam.com/news/auction-notices.**

**இது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(1)-இன் கீழான சட்டப்படியான 15 நாள் விற்பனை அறிவிப்பும் ஆகும்.**

தேதி: 18-08-2026
**இடம் : திருச்சி, புதுக்கோட்டை**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**